tnkalvi.online

No. of Printed Pages : **5**

6807(A)

பதிவு எண்

Part III — Vocational Subjects

வேளாண் அறிவியல்

AGRICULTURAL SCIENCE

(தமிழ் வழி / Tamil Version)

கால அளவு : 3.00 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிப்பில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

பகுதி - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **15x1=15**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. ஆரம்ப காலத்தில் வேளாண்மை _____ என்ற பொருளில் குறிப்பிடப்பட்டது.

(அ) உணவு பாதுகாத்தல் (ஆ) உணவு பதப்படுத்துதல்

(இ) உணவு சேகரித்தல் (ஈ) உணவுப் பொருள் உற்பத்தி செய்தல்

2. வடகிழக்குப் பருவக்காற்று காலம் _____.

(அ) ஜனவரி - மார்ச் (ஆ) ஜூன் - செப்டம்பர்

(இ) மார்ச் - மே (ஈ) அக்டோபர் - டிசம்பர்

[திருப்புக

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-agricultural-science-public-march-2023-tm-paper-6807 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

3. _____ pH அளவுள்ள மண்ணை நடுநிலையான மண் என்று கூறலாம்.

(அ) 6.5 - 7.5 (ஆ) 0 - 6.5 (இ) 8.5 - க்கு மேல் (ஈ) 7.5 - 8.5

4. பழங்களின் ராஜா _____.

(அ) வாழை (ஆ) பலா (இ) சப்போட்டா (ஈ) மா

5. மழை மூலம் பெறப்பட்ட நிலத்தடி நீரைப் பயன்படுத்தி செய்யப்படும் சாகுபடி :

(அ) பல பயிர் சாகுபடி (ஆ) நன்செய் சாகுபடி

(இ) தோட்டக்கால் சாகுபடி (ஈ) மானாவாரி சாகுபடி

6. கோனோ களைவெட்டி மூலம் _____ பயிரில் களை எடுக்கலாம்.

(அ) கரும்பு (ஆ) பருத்தி (இ) மஞ்சள் (ஈ) நெல்

7. பண்படுத்தப்பட்ட நிலத்தில் விதைகளை இடுதல் _____ எனப்படும்.

(அ) நடவு (ஆ) அறுவடை

(இ) விதைப்பு (ஈ) மேற்கூறிய அனைத்தும்

8. பயிரின் வேர் மண்டலத்தில் ஒரு குறிப்பிட்ட ஆழத்தில் நீர் பாய்ச்சுவது :

(அ) அடிமண் பாசனம் (ஆ) பாத்திப் பாசனம்

(இ) தெளிப்புப் பாசனம் (ஈ) கழிவுநீர் பாசனம்

9. பொருத்துக :

(1)	முதல் நிலை பேரூட்டச்சத்து	(i)	கந்தகம்
(2)	இரண்டாம் நிலை பேரூட்டச்சத்து	(ii)	இரும்பு
(3)	நுண்ணூட்டச் சத்து	(iii)	பொட்டாசியம்
(4)	அரிதான தனிமம்	(iv)	நிக்கல்

(அ) (1)-(i), (2)-(ii), (3)-(iii), (4)-(iv)

(ஆ) (1)-(iii), (2)-(i), (3)-(ii), (4)-(iv)

(இ) (1)-(ii), (2)-(iii), (3)-(iv), (4)-(i)

(ஈ) (1)-(iv), (2)-(ii), (3)-(i), (4)-(iii)

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-agricultural-science-public-march-2023-tm-paper-6807 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

10. ஒட்டுண்ணிக் களை _____.
(அ) கற்றாழை (ஆ) அருகு (இ) சுடுமல்லி (ஈ) நாயுருவி

11. தேமல் நோயை ஏற்படுத்தும் நோய்க்காரணி _____.
(அ) நச்சுயிரி (ஆ) பூசணம்
(இ) ஃபைட்டோபிளாஸ்மா (ஈ) பாக்டீரியா

12. காற்று புகாக் கலன் _____.
(அ) தகர டின் (ஆ) காகிதப் பை (இ) துணிப் பை (ஈ) சணல் பை

13. தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி (NABARD) அமைக்கப்பட்ட ஆண்டு _____.
(அ) 1980 (ஆ) 1986 (இ) 1972 (ஈ) 1982

14. 'ஏழைகளின் பசு' என்று குறிப்பிடப்படுவது _____.
(அ) குரும்பை ஆடு (ஆ) வெள்ளாடு
(இ) மேச்சேரி ஆடு (ஈ) செம்மறி ஆடு

15. முட்டையிடும் மீன் இனம் _____.
(அ) மத்தி மீன் (ஆ) பிளாட்டி
(இ) நியான் டெட்ரா (ஈ) கத்திவால்

பகுதி - II

குறிப்பு : எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **28** -க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும். **10x3=30**

16. வெண்மைப் புரட்சி பற்றி எழுதுக.

17. நில நீர் என்றால் என்ன ?

18. பயறு வகைப் பயிர்கள் பற்றிக் குறிப்பு வரைக.

19. ஊடுபயிர் சாகுபடியின் குறிக்கோள்கள் யாவை ?

20. விதை உறக்கம் என்றால் என்ன ?

[திருப்புக

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-agricultural-science-public-march-2023-tm-paper-6807 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

21. நீர் ஆதாரங்கள் பற்றிக் குறிப்பு வரைக.

22. தன்மையைப் பொருத்து உரங்கள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகின்றன ?

23. களைகள் பரவும் முறைகளில் ஏதேனும் மூன்றினைக் குறிப்பிடுக.

24. ஒருங்கிணைந்த பூச்சி கட்டுப்பாடு என்றால் என்ன ?

25. தீவனப் பயிர்களை எவ்வாறு பதப்படுத்தலாம் ?

26. சந்தைப்படுத்துதல் என்றால் என்ன ?

27. வெள்ளாடுகளின் பண்புகள் பற்றி குறிப்பு வரைக.

28. அலங்கார மீன்களுக்கு எவ்வகை உணவு தேவைப்படுகிறது ?

பகுதி - III

குறிப்பு : **எவையேனும் ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **35** -க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும். **5x5=25**

29. வானிலை முன்னறிவிப்பின் வகைகளை விளக்குக.

30. மண்ணின் பணிகள் யாவை ?

31. உரப் பயிர்களைப் பற்றி எழுதுக.

32. பரவல் பாசனம் என்றால் என்ன ? அதன் நிறை மற்றும் குறைகளைப் பற்றி எழுதுக.

33. ஊட்டச்சத்து பயன்படுதிறனை அதிகரிப்பதன் மூலம் ஏற்படும் நன்மைகள் யாவை ?

34. பூச்சிகளின் வாழ்க்கைச் சுழற்சி பற்றி விளக்குக.

35. கால்நடைகளின் மாற்றுத் தீவனமான அசோலாவின் சிறப்பம்சங்களைப் பற்றி விவரிக்கவும்.

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-agricultural-science-public-march-2023-tm-paper-6807 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

பகுதி - IV

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **2x10=20**

36. (அ) மண் அரிமானத்தைத் தடுக்கும் முறைகளை விவரிக்கவும்.

அல்லது

(ஆ) வேளாண் விளைபொருட்களை ஏன் மதிப்பு கூட்டி விற்பனை செய்ய வேண்டும் ?

37. (அ) விளக்குக.

(i) களைகளால் ஏற்படும் பாதிப்புகள் யாவை ?

(ii) ஒருங்கிணைந்த களைக் கட்டுப்பாடு என்றால் என்ன ?

அல்லது

(ஆ) நுண்ணுயிரிகள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ நமக்கு எவ்வாறு நன்மை செய்கின்றன ?

- o 0 o -

tnkalvi.online

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-agricultural-science-public-march-2023-tm-paper-6807 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

.

tnkalvi.online